செ.வெ.எண். நாள். 18.06.2021

**விருதுநகர் மாவட்டம்**

**நியாயவிலைக்கடையில் கொரோனா சிறப்பு நிவாரண நிதி இரண்டாவது தவணை ரூ.2 ஆயிரம் மற்றும் 14 வகையான மளிகைப்பொருட்களை வழங்கும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி.,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.**

----

விருதுநகர் பாண்டியன் நகரில் அமைந்துள்ள நியாயவிலைக்கடையில் கொரோனா சிறப்பு நிவாரண நிதி இரண்டாவது தவணை ரூ.2 ஆயிரம் மற்றும் 14 வகையான மளிகைப்பொருட்களை வழங்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி.,இ.ஆ.ப., அவர்கள் இன்று(18.06.2021) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அரிசி பெறும் குடும்ப அட்டைத்தாரர்களுக்கு கொரோனா சிறப்பு நிவாரண நிதி இரண்டாவது தவணை ரூ.2 ஆயிரம் மற்றும் 14 வகையான மளிகைப்பொருட்களை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது நியாயவிலைக்கடை ஊழியர்கள், பொதுமக்களுக்கு காலதாமதமின்றி பொருட்கள் வழங்குவது குறித்தும், நிவாரண நிதி மற்றும் 14 வகையான மளிகைப்பொருட்கள் எவ்வாறு வினியோகிக்கப்படுகிறது என்பது குறித்தும், பி.ஓ.எஸ். இயந்திரத்தில் எவ்வாறு பயனாளிகள் விவரம் பதிவேற்றப்படுகிறது என்பது குறித்தும், பயனாளிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள நிவாரண நிதி மற்றும் 14 வகையான மளிகைப்பொருட்கள் விவரம் மற்றும் முழுமையாக வழங்கப்பட்டுகிறதா என்பது குறித்தும் ஆய்வு செய்தார்.

விருதுநகர் மாவட்டத்திலுள்ள அனைத்து நியாயவிலைக்கடைகளிலும், கொரோனா நோய்தொற்று தடுப்பு தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல், தடுப்பூசி போட்டுக்கொள்வதன் அவசியம் மற்றும் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு பதாகைகள் வைப்பதற்கும், நியாயவிலைக்கடைகளுக்கு வரும் பொதுமக்கள் தடுப்பூசி போட்டுக்கொண்டார்களா என கேட்டறியவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதை தொடந்து, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அருகில் 200 ஆக்சிசன் படுக்கை வசதியுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையத்திற்கு சென்று, கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களிடம், அவர்களுக்கு வழங்கப்படும் உணவு தரமானதாகவும், போதுமானதாகவும் உள்ளதா என்பது குறித்தும், குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும் கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

பின்னர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று தடுப்பூசி போடும் இடம், RTPCR பரிசோதனை கூடம், ஆக்சிசன் உற்பத்தி மையம், புதிதாக கட்டப்பட்டு வரும் மருத்துவமனை கட்டிடங்கள் பணி முன்னேற்றம் குறித்தும், கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருபவர்களின் விவரம் குறித்தும், புற நோயாளிகள் வருகை எண்ணிக்கை விவரம் குறித்தும் ஆய்வு செய்தார். அங்கு நடைபெற்ற மருத்துவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, மருத்துவர்களின் பணிகள் மகத்தானது என்று கூறி இரண்டாம் அலை கட்டுப்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து மருத்துவர்களுக்கும் பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்து கொண்டு, இனி வரும் காலங்களில் கொரோனா நோயை கட்டுப்படுத்துவதற்கு அர்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொண்டார். மேலும் கொரோனா தடுப்பு பணிக்கு தேவையான உதவிகளை செய்து கொடுப்பதற்கு மாவட்ட நிர்வாகம் உறுதுணையாக் இருக்கும் என தெரிவித்தார்.

அதை தொடந்து, புதிதாக கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவக்கல்லூரியின் பணி முன்னேற்றம் குறித்தும், இந்த பகுதியை பசுமையாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சங்குமணி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கல்யானகுமார், தனிவட்டாட்சியர் (குடிமைப்பொருள்) திரு.பொன்ராஜ் உட்பட அரசு மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**